**OS.No.213/2011 & 264/2014 D.W.1-இந்துமதி 27.02.2026**

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

என் மாமனாருக்கு தேவையான அன்றாட தேவைகளை அவரது மகன்கள் செய்வார்கள் என்றால் இல்லை, அவரே செய்துக் கொள்வார். என் மாமனார் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு வரை படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் இல்லை. கடைசி 10 நாட்கள் மட்டுமே படுத்த படுக்கையாக இருந்தார். நான் தமிழ்நாடு மின்வாரியத்தில் மதிப்பீட்டு அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றேன். என் மாமனார் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு வரை படுத்த படுக்கையாக இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. என் மாமனார் பிறர் உதவியின்றி நடமாட முடியாத நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. என் மாமனாருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வேதகிரியும், அவரது மகன்களும் தான் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது ஆவணங்களில் என் மாமனாருக்கு 84 வயது என்று தவறுதலாக காட்டியுள்ளேன் என்றும், இறக்கும் தருவாயில் அவருக்கு வயது 92 என்றும் சொன்னால் சரியல்ல. என் மாமனாருக்கு தனிப்பட்ட முறையில் வங்கி கணக்கு இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும், என் கணவரும் 11.09.2006-ல் கிரயம் பெற்றோம் என்றால் சரிதான். அக்கிரயத்தின் போது நான் எவ்வளவு பணம் கொடுத்தேன் என் கணவர் எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் நான் ரூபாய் 2 லட்சத்தை கடன் போட்டு கொடுத்தேன். அந்த பணத்தை ஆறுமுகத்திடம் நான் கொடுத்தேனா என்றால் என் கணவர் தான் கொடுத்தார். என் கணவர் கொடுத்ததை நான் நேரில் பார்த்தேனா என்றால் நேரில் பார்த்தேன். ஆறுமுகம் என்ன காரணத்திற்காக வழக்கு சொத்தை எனக்கும், என் கணவருக்கும் கிரயம் செய்தார் என்றால் தன் மக்களான ரவி, கிருபாவதி ஆகியோரின் திருமண செலவிற்காகவும், வாங்கிய கடனை கொடுப்பதற்காகவும் கிரயம் செய்து கொடுத்தார். ரவிக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. அவருக்கு 2006ம் ஆண்டில் திருமணம் நடந்திருக்குமா என்றால் எனக்கு தெரியவில்லை. கிருபாவதிக்கு ரவிக்கு திருமணம் நடந்த பிறகு திருமணம் நடந்தது. ரவிக்கு எந்த வயதில் திருமணம் நடந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. ரவிக்கு 35 வயதிலும், கிருபாவதிக்கு 28 வயதிலும் திருமணம் நடைபெற்றது. வழக்கு தாக்கல் செய்த போது கிருபாவதிக்கு 2006ல் 49 வயது என்றால்

சரியல்ல. ரவி மற்றும் கிருபாவதியின் திருமணத்திற்காக கிரயம் செய்யப்பட்டது என்ற விவரம் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆறுமுகம் ரூபாய் 2 லட்சம் கடனை யாரிடம் வாங்கியிருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியிருந்தாரா என்றால் எங்கையாவது வாங்கியிருப்பார். ஆறுமுகம் யாரிடமும் கடன் வாங்கவில்லை என்றும், அதனால் தான் குறிப்பிட்டு அவர் யாரிடம் கடன் வாங்கினார் என்று என்னால் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. ஆறுமுகத்திற்கு இறக்கும் போது 94 வயது என்றும், அவரது இறக்கும் தருவாயில் 28 வயதில் கிருபாவதி இருந்தார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. கிரயம் பத்திரம் எழுவதற்கு 40 ஆண்டுகளுக்கு முன்னரே ஆறுமுகத்தின் மக்களுக்கு திருமணம் நடந்து விட்டது என்றும், அவ்வாறான நிலையில் திருமணத்திற்காக வாங்கிய கடனுக்கு கிரயம் செய்து கொடுத்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. படுத்த படுக்கையாக இருந்த ஆறுமுகத்தை வலுக்கட்டாயமாக அழைத்து சென்று வலுக்கட்டாயப்படுத்தி சார் பதிவாளர் அலுவலகத்தில் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தை கிரய பத்திரமாக எழுதி வாங்கினோம் என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு கிரய பத்திரங்களும் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வாதி கோரியபடி வழக்கு சொத்து பாகப்பிரிவினை செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனது வழக்கு பொய்யானது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை